செய்தி வெளியீடு எண். 39-2018 நாள்: 17.07.2018

# இந்திய விமானப் படையில் ஏர்மேன் பணியிடத்திற்கான தேர்வு தஞ்சாவூர் மாவட்டம் அன்னை சத்யா ஸ்டேடியம் இடத்தில் நடைபெற உள்ளது.

*****

இந்திய விமானப் படையில் ஏர்மேன் பணியிடத்திற்கான தேர்வு அன்னை சத்யா ஸ்டேடியம், தஞ்சாவூர் என்ற முகவரியில் ஜுலை 23 மற்றும் 26 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது. திருமணமகாத 14.07.1998 முதல் 26.06.2002க்கு இடைப்பட்ட காலத்தில் பிறந்த இந்திய ஆண் குடிமகன்கள் இத்தேர்வில் கலந்து கொள்ளலாம்.

விண்ணப்பதாரர்கள் (10+2) பன்னிரண்டாம் வகுப்பு தேர்ச்சி (12TH/INTERMEDIATE/EQUIVALENT) பெற்றவராக இருத்தல் வேண்டும். இயற்பியல், வேதியியல், உயிரியியல் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் 50 சதவிகித மதிப்பெண்களுடன், ஆங்கிலப் பாடத்தில் 50 சதவிகித மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் தமிழ்நாடு அல்லது பாண்டிச்சேரியில் பிறந்தவராக இருத்தல் வேண்டும். சான்றிதழ்களில் இருப்பிடம் குறித்து தெரிவிக்கப்படவில்லை எனில், சம்மந்தப்பட்ட வட்டாட்சியர் அல்லது சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் இருப்பிட சான்று பெறுதல் வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் பத்தாம் மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழை கொண்டுவர வேண்டும். மதிப்பெண் சான்றிதழை கல்லூரி/ பள்ளியில் சமர்ப்பித்துள்ளவர்கள், சம்மந்தப்பட்ட முதல்வர்களிடம், சான்றிதழ் கல்லூரி/ பள்ளியில் உள்ளது என சான்றொப்பமிட்டு அளிக்க வேண்டும். தன்னொப்பமிட்ட சான்றிதழ் நகல்கள் மேற்குறிப்பிட்டுள்ள சான்றிதழுடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

அரியலூர், சென்னை, கோயம்புத்தூர், காஞ்சிபுரம், கரூர், கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், பெரம்பலூார், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவள்ளுர், திருவாரூர், திருவண்ணாமலை, திருப்பூர், திருச்சி, வேலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கும 23.07.2018 அன்று தேர்வு நடைபெறும்.

வேலூர், கடலூர், தர்மபுரி, திண்டுக்கல், ஈரோடு, கன்னியாகுமரி, மதுரை, நாமக்கல், ராமநாதபுரம், சேலம், சிவகங்கை, நீலகிரி, தேனி, திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் பாண்டிச்சேரியை (பாண்டிச்சேரி (ம) காரைக்கால்) சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கு 26.07.2018 அன்று தேர்வு நடைபெறும்.

மேலும் விவரங்களுக்கு, www.airmenselection.gov.in என்ற இணையதள முகவரியிலோ, 044-22390561, 044-22395553 (extension-7833) தொலைபேசி எண்களிலோ மற்றும் co.8asc-tn@gov.in என்ற மின்னஞ்சல் முகவரியையோ தொடர்பு கொள்ளலாம்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.